செய்திவெளியீடு எண். 73/2018 நாள் 27.11.2018

சென்னைக் குடிநீர் வாரியத்தின் பொறியியல் இயக்குநராக திரு.ஆர்.சிவசண்முகம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். சென்னைக் குடிநீர் வாரியத்தின் 32 ஆண்டுகள் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவர்.

தஞ்சை மாவட்டம் வடசேரி கிராமத்தைச் சேர்ந்த திரு.ஆர்.சிவசண்முகம் பொறியியல் படிப்பினைஅண்ணாமலை பல்கலைக் கழகத்திலும் M.Tech Enviromental Engineering படிப்பினை சென்னை ஐ.ஐ.டி யிலும் பயின்றவர்.

இவரது தந்தையார் திரு.கே.ராமநாதன் தஞ்சை மாவட்டம் வடசே96ரி கிராம பஞ்சாயத்தின் தலைவராக இருந்தவர்.

1) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அமைப்புகளை வடிவமைத்தல்
2) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் வடிவமைத்தல் மற்றும் பராமரிப்பு அனுபவம்
3) குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல்
4) கசிவுகளை கண்டறிதல் மற்றும் சரிசெய்தல் பணியில் சிறப்பு அனுபவம்
5) வறட்சி மற்றும் வெள்ளப் பெருக்கு காலங்களில் போர்க்கால அடிப்படையில் பணி ஆற்றுதலில் மிகவும் அனுபவம் பெற்றவர்.

அண்மையில் உலக கழிப்பறை தினத்தினை முன்னிட்டு டெல்லி விக்யான் பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணை அமைச்சர் திரு.ராம்தாஸ் அத்வாலே அவர்களால் ‘‘பாதாள சாக்கடையில் மனிதர்கள் இறங்காமல் பந்து கடத்தும் முறையில் சுத்தம் செய்வது’’ குறித்து நடைபெற்ற தொழில்நுட்ப சவால் போட்டியில் சென்னை குடிநீர் வாரியம் பங்கேற்று பரிசினை பெற பெரும்பங்கு ஆற்றி சென்னை குடிநீர் வாரியத்திற்கு அளிக்கப்பட்ட பரிசினை திரு.ஆர்.சிவசண்முகம் அவர்கள் நேரடியாக பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்